In the Court of the Principal District & Sessions Judge, Thoothukudi
Case No : Spl.C.36/2026
Deposition of DW.4
****

Name திரு.தங்கராஜ்

Father's Name

Village

Taluk

Calling

Age

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 on the 25th day of August 2026.

**Accused present.**

**<u>முதல் விசாரணை :</u>**

எதிரி தரப்பு சாட்சியமாக விசாரிக்க கொடுக்கப்பட்ட அழைப்பாணையின் பேரில் சாட்சியம் அளிக்கிறேன். நான் 2007 ல் ஏரல் வட்ட ஆய்வாளராக பணியாற்றினேன். எனக்கு துாத்துக்குடி விஜிலென்ஸ் ஏடிஎஸ்பி எதிரியின் நோட்புக் கேட்டிருந்தேன் என்றால் சரிதான். அப்போது நான் ஏரல் வட்ட ஆய்வாளர், ஆனால் பொறுப்பு என என்னிடம் காட்டப்படும் அ.சா.ஆ.20 பக்கம் 3 ல் உள்ளது என்றால் சரிதான். பக்கம் 3 ல் உள்ள என்னுடைய கையெழுத்து மற்றும் முத்திரை உள்ளது.அது எ.சா.ஆ.34 எதிரியின் நோட்புக் கேட்டு விண்ணப்பம் ஏதும் கொடுக்கப்பட்டதா என்றால் இல்லை. ஸ்ரீவைகுண்டம் டிஎஸ்பி என்னிடம் அ.சா.ஆ.20 ஆவணத்தின் படி எதுவும் கேட்கவில்லை. என்னிடம் காண்பிக்கப்படும் ஆவணமானது துாத்துக்குடி கூடுதல் கண்காணிப்பாளர் மூலம் தகவல் அறியும் உரிமைச் சட்டத்தின் கீழ் பெறப்பட்ட அந்த ஆவணத்தில் என்னுடைய கையொப்பம் இல்லை. ஆழ்வார்திருநகரி பொறுப்பு ஆய்வாளராக இருந்த போது விஜிலென்ஸ் காவல் ஆய்வாளர் எதிரி மீது பதிவு செய்யப்பட்ட வழக்கு சம்பந்தமாக ஆவணங்கள் கோரி வேண்டுகோள் விண்ணப்பம் கொடுத்துள்ளார். அதன்பேரில் என்னால் கொடுக்கப்பட்ட ஆவணம் எ.சா.ஆ.35 ஆகும். ஆழ்வார்திருநகரி காவல்நிலையம், குரும்பூர் காவல் நிலைய ஆவணங்களை கோரி கொடுக்கப்பட்ட வேண்டுகோளின் படி என் கீழ் உள்ள அதிகாரிகளுக்கு

S SUBA DEVI Digitally signed by S SUBA DEVI Date: 2026.08.25 14:27:59 +0530

உத்தரவிட்டேன். அந்த உத்தரவு எ.சா.ஆ.36 ஆகும். ஆழ்வார்திருநகரி காவல் நிலைய குற்ற எண்.21/2007, 302 இதச என்னுடைய புலன்விசாரணைக்கு எடுக்கப்பட்டது. என்னிடம் விஜிலென்ஸ் காவல் ஆய்வாளர் ஆவணங்கள் கோரி அதன்படி கொடுக்கப்பட்ட ஆவணத்தின் சம்பந்தமாக என்னிடம் விசாரணை செய்து வாக்குமூலம் பெற்றனரா என்றால் இல்லை.

__குறுக்குவிசாரணை :__ **(அரசு தரப்பில்)**

என்னிடம் காட்டப்படும் அ.சா.ஆ.20 பக்கம் 3ல் உள்ள கையெழுத்து என்னுடையது என்றால் ஆமாம். அது நான் நல்ல நிலையில் இருந்த போது போடப்பட்டது என்றால் ஆமாம். அனுப்புநர் விலாசத்தில் காவல் ஆய்வாளர் பொறுப்பு ஆழ்வார்திருநகரி என்று கொடுத்துள்ளேன் என்றால் சரிதான். நான் எந்த கால கட்டத்தில் ஆழ்வார்திருநகரி ஆய்வாளர் பொறுப்பில் இருந்தேன் என்றால் 2006-2007 கால கட்டத்தில். எனக்கு முன்பாக எந்த ஆய்வாளர் இருந்தார் என்றால் சரியாக தெரியவில்லை. அ.சா.ஆ.20 பக்கம் 3ல் நான் ஆழ்வார்திருநகரி வட்ட ஆய்வாளர் மனோகரின் நோட்புக் வட்ட அலுவலகத்தில் தேடிப்பார்த்ததில் இல்லையென கொடுக்கப்பட்டது என்றால் ஆமாம். அந்த சமயத்தில் மணி என்பவர் தான் டிஎஸ்பி என்றால் சரிதான். ஆவணங்களான எ.சா.ஆ.35 மற்றும் 36 அனுப்பியதற்காக அத்தாட்சி ஏதும் பெற்றேனா என்றால் இல்லை. நான் ஆவணங்களை கொடுத்த பிறகு எத்தனை வருடங்கள் ஆழ்வார்திருநகரியில் ஆய்வாளராக இருந்தேன் என்றால் 2007, 9ம் மாதம் வரை இருந்தேன். நான் விஜிலென்சுக்கு கொடுத்த ஆவணங்கள் திருப்பி என் அலுவலகத்தில் ஒப்படைக்கப்பட்டது குறித்து எனக்கு தெரியுமா என்றால் தெரியாது. தகவல் அறியும் உரிமைச் சட்டத்தின் கீழ் நான் கொடுத்த ஆவணமா எ.சா.ஆ.35 மற்றும் 36 என்றால் இல்லை. ஆய்வாளர் விஜிலென்சுக்கு நான் அந்த ஆவணங்களை அனுப்பி வைத்தேன். ஆவணங்களை நான் எதிரிக்கு வழங்காததால் அது குறித்து சொல்ல தகுதியானவர் இல்லை என்றால் சரியல்ல. சம்பவம் நடந்ததாக சொல்லும் காலத்தில் நான் ஏரல் ஆய்வாளர் பொறுப்பு ஆழ்வார்திருநகரி என்றால் சரிதான். எதிரி பணியிடை நீக்கம் செய்யப்பட்ட பிறகு நான் ஆழ்வார்திருநகரி ஆய்வாளராக பொறுப்பு வகித்தேன் என்றால் ஆமாம்.

S SUBA DEVI
Digitally signed by S SUBA DEVI
Date: 2026.08.25 14:28:05 +0530

**மறுவிசாரணை :**

இல்லை.

என்னால் திறந்த நீதிமன்றத்தில் எதிரி/எதிரிகள் தரப்பு முன்னிலையில் சொல்லப்பட்டு தட்டச்சரால் தட்டச்சு செய்யப்பட்டு சாட்சிக்கு படித்து காண்பிக்கப்பட்டு அவரால் சரியென்று ஒப்புக்கொள்ளப்பட்டு கையெழுத்து/கைரேகை செய்யப்பட்டது.

S SUBA DEVI

Digitally signed by S SUBA DEVI
Date: 2026.08.25 14:28:11 +0530

**முதன்மை மாவட்ட அமர்வு நீதிபதி,**
**தூத்துக்குடி.**

In the Court of the Principal District & Sessions Judge, Thoothukudi
Case No : Spl.C.36/2026
Deposition of DW.5
****

Name திரு.ராமசாமி

Father's Name

Village

Taluk

Calling

Age

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 on the 25th day of August 2026.

**Accused present.**

**முதல் விசாரணை :**

நான் தற்போது காவல்துறை துணைத்தலைவர் திருநெல்வேலி சரக அலுவலகத்தில் தண்டனை பிரிவில் கண்காணிப்பாளராக பணிபுரிந்து வருகிறேன். எதிரி தரப்பில் சாட்சியம் அளிக்க டிஐஜிக்கு வழங்கப்பட்ட சம்மனின் பேரில் அவர் எனக்கு சாட்சியம் அளிக்க கொடுத்த அங்கீகார கடிதம் எ.சா.ஆ.37 ஆகும். எதிரி கேட்ட எந்த ஆவணமும் தண்டனை பட்டியல் பிரிவு சம்பந்தப்பட்டது அல்ல. சரக காவல் துறை தலைவரால் அனுப்பப்பட்ட கடிதத்தில் 01.12.2006 முதல் 30.12.2006 வரை தினசரி நாட்குறிப்புகள் தங்களது அலுவலகத்தில் பராமரிக்கப்படவில்லை என்ற விபரத்தை 21.8.2026 தேதியிட்ட கடிதத்தில் குறிப்பிட்டுள்ளார். அந்த கடிதம் எ.சா.ஆ.38 ஆகும். காவல் சார்நிலைப்பணி விதிகளின் கீழ் ஒழுங்கு மற்றும் மேல்முறையீடு விதிகளின்படி கொடுக்கப்பட்ட குற்றச்சாட்டு குறிப்பாணை மற்றும் இணைப்புகளுடன் கூடியது எ.சா.ஆ.39 ஆகும்.

**குறுக்குவிசாரணை : (அரசுதரப்பில்)**

**இல்லை.**

S SUBA DEVI Digitally signed by S SUBA DEVI Date: 2026.08.25 14:28:18 +0530

**மறுவிசாரணை :**

இல்லை.

என்னால் திறந்த நீதிமன்றத்தில் எதிரி/எதிரிகள் தரப்பு முன்னிலையில் சொல்லப்பட்டு தட்டச்சரால் தட்டச்சு செய்யப்பட்டு சாட்சிக்கு படித்து காண்பிக்கப்பட்டு அவரால் சரியென்று ஒப்புக்கொள்ளப்பட்டு கையெழுத்து/கைரேகை செய்யப்பட்டது.

S SUBA DEVI

Digitally signed by S SUBA DEVI
Date: 2026.08.25 14:28:23 +0530

**முதன்மை மாவட்ட அமர்வு நீதிபதி,**
**தூத்துக்குடி.**